ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1778/41 - 2012 ඔක්තෝබර් මස 05 වැනි සිකුරාදා - 2012.10.05

1778/41 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

பகுதி I : தொகுதி (I)- பொது

அரசாங்க அறிவித்தல்கள்

மதுவரிக் கட்டளைச் சட்டம்

மதுவரி அறிவித்தல் இல. 952

(பனங்கள்ளு அல்லது ஏதேனும் காய்ச்சி வடித்தல் மூலம் தயாரிக்கப்பட்ட மதுபானம் தவிர்ந்தவை)

காலத்துக்குக் காலம் திருத்தப்பட்ட மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயம்) 22 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவினால் எனக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், 2012, ஒற்றோபர் மாதம் 06 ஆந் திகதியிலிருந்து பயன் வலுப்பெறும் வகையில்,

(1) *பனை மரத்தின் இயற்கையான உற்பத்திப் பொருட்கள் அல்லது ஏதேனும் தாவரத்திலிருந்து காய்ச்சி வடித்தல் தவிர்ந்த செயன்முறை மூலம் உற்பத்தி செய்யப்பட்ட அற்கஹோலின் 4 சதவீதத்திற்கு (4%) மேல் கனச் செறிவுள்ள (கள்ளு அல்லது வேறு தானியம் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட ஏதேனும் மதுபானம் தவிர்ந்த) இலங்கையில் தயாரிக்கப்பட்ட மதுபானத்தின் மீது அனுமதிக்கப்பட்ட ஒவ்வொரு வடி நீர்மங்களின் செறிம லீற்றருக்கும் எண்ணூற்று தொண்ணூற்று எட்டு ரூபா (ரூபா 898.00) எனும் வீதத்தில் தீர்வை ஒன்று அறவிடப்பட வேண்டும். ஆனாலும், மேற்குறிப்பிடப்பட்டுள்ள மதுபானங்கள் இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும்போது, அத்தொகை எவ்வளவாயினும், அவற்றின் மீது அத்தகைய தீர்வை விதிக்கப்படவோ அல்லது அறவிடப்படவோ கூடாது எனவும் ; அத்துடன்*

(2) *2012.03.30 ஆந் திகதிய 1751/29 ஆம் இலக்கத்தைக் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 947 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது எனவும்,*

இக்கட்டளை மூலம் பணிக்கின்றேன்.

மஹிந்த ராஜபக்ஷ,
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

நிதி, திட்டமிடல் அமைச்சு,
கொழும்பு 01,
2012, ஒற்றோபர் 05.

10 - 908/1

மதுவரிக் கட்டளைச் சட்டம்

மதுவரி அறிவித்தல் இல. 953

வெல்லப்பாகு, பனஞ்சாராயம், தென்னை மற்றும் பதனிடப்பட்ட சாராயம் மீதான தீர்வை

காலத்துக்குக் காலம் திருத்தப்பட்ட மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயம்) 22 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவினால் எனக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், 2012, ஒற்றோபர் மாதம் 06 ஆந் திகதியிலிருந்து பயன் வலுப்பெறும் வகையில்,

(1) இலங்கையில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள உத்தரவுப்பத்திரம் பெற்ற உற்பத்தி நிலையத்திலிருந்து உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்படும் வெல்லப்பாகு (மொலாசியஸ்), பனஞ்சாராயம், தென்னை மற்றும் பதனிடப்பட்ட சாராயம் என்பவற்றின் மீது அனுமதிக்கப்பட்ட, ஒவ்வொரு வடி நீர்மங்களின் செறிம லீற்றருக்கும் ஆயிரத்து நாற்பத்து மூன்று ரூபா (ரூபா 1043.00) எனும் வீதத்தில் தீர்வை ஒன்று அறவிடப்பட வேண்டும். ஆனாலும் மேற்குறிப்பிடப்பட்டுள்ள சாராயம் இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும்போது, அத்தொகை எவ்வளவாயினும், அவற்றின் மீது அத்தகைய தீர்வை விதிக்கப்படவோ அல்லது அறவிடப்படவோ கூடாது எனவும் ; அத்துடன்

(2) 2012.03.30 ஆந் திகதிய 1751/29 ஆம் இலக்கத்தைக் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 948 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது எனவும் ,

இக்கட்டளை மூலம் பணிக்கின்றேன்.

மஹிந்த ராஜபக்ஷ,
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

நிதி, திட்டமிடல் அமைச்சு,
கொழும்பு 01,
2012, ஒற்றோபர் 05.

10- 908/2

மதுவரிக் கட்டளைச் சட்டம்

மதுவரி அறிவித்தல் இல. 954

இலங்கையில் தயாரிக்கப்பட்ட வெளிநாட்டு மதுசாரம் மீதான தீர்வை

காலத்துக்குக் காலம் திருத்தப்பட்ட மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயம்) 22 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவினால் எனக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், 2012, ஒற்றோபர் மாதம் 06 ஆந் திகதியிலிருந்துபயன் வலுப்பெறும் வகையில்,

(1) இலங்கையில் தயாரிக்கப்பட்ட வெளிநாட்டு மதுசாரம் மீது அனுமதிக்கப்பட்ட, ஒவ்வொரு வடி நீர்மங்களின் செறிம லீற்றருக்கும் ஆயிரத்து நூற்று எண்பத்து மூன்று ரூபா (ரூபா 1,183.00) எனும் வீதத்தில் தீர்வை ஒன்று அறவிடப்பட வேண்டும். ஆனாலும் மேற்குறிப்பிடப்பட்டுள்ள வெளிநாட்டு மதுசாரங்கள் இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும்போது, அத்தொகை எவ்வளவாயினும், அவற்றின் மீது அத்தகைய தீர்வை விதிக்கப்படவோ அல்லது அறவிடப்படவோ கூடாது எனவும் ; அத்துடன்

(2) 2012.03.30 ஆந் திகதிய 1751/29 ஆம் இலக்கத்தைக் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 941 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது எனவும்

இக்கட்டளை மூலம் பணிக்கின்றேன்.

மஹிந்த ராஜபக்ஷ,
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

நிதி, திட்டமிடல் அமைச்சு,
கொழும்பு 01,
2012, ஒற்றோபர் 5.

10- 908/3

மதுவரிக் கட்டளைச் சட்டம்

மதுவரி அறிவித்தல் இல. 955

மாவுறற் மதுபானம் மீதான மதுவரித் தீர்வை

காலத்துக்குக் காலம் திருத்தப்பட்ட மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயம்) 22 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவினால் எனக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், 2012, ஒற்றோபர் மாதம் 6 ஆந் திகதியிலிருந்து பயன் வலுப்பெறும் வகையில்,

(1) இலங்கையில் அனுமதி பெற்ற உற்பத்திச்சாலை எதனிலுமிருந்து உற்பத்தி செய்யப்பட்டு, அதன் சுட்டுத் துண்டில் சுத்த மதுசாரச் செறிவு ஐந்து சத வீதத்திற்குக் (5%) குறைந்ததெனக் குறிப்பிட்டு வெளியாகும் மாவுறற் மதுபானம் ஒவ்வொரு லீற்றருக்கும் நூறு ரூபா (ரூபா 100.00) எனும் வீதத்தில் தீர்வை ஒன்று அறவிடப்படல் வேண்டுமென்றும் ;

(2) இலங்கையிலுள்ள அனுமதி பெற்ற உற்பத்திச்சாலை எதனிலுமிருந்து உற்பத்தி செய்யப்பட்டு அதன் சுட்டுத் துண்டில் சுத்த மதுசாரச் செறிவின் ஐந்து வீதம் (5%) அல்லது அதற்குக் கூடுதலானதெனக் குறிப்பிட்டு வெளியாகும் மாவுறற் மதுபானம் ஒவ்வொரு லீற்றருக்கும் நூற்றிப்பதினாறு ரூபா (ரூபா 116.00) எனும் வீதத்தில் தீர்வை ஒன்று அறவிடப்படல் வேண்டுமென்றும்;

(3) அத்தகைய மதுபானம் அனுமதிபெற்ற உற்பத்திச்சாலை எதனிலுமிருந்து இலங்கையிலுள்ள எந்த இராஜதந்திர தூதரகத்தின் பாவனைக்காகவும் அல்லது எந்த வெளிநாட்டிற்கும் வழங்கப்படின் மேற்படி வழங்கிய மதுபானத்துக்கான கொடுப்பனவு அத்தூதரகத்தின் வெளிநாட்டுக் கணக்கிலிருந்து பெறப்படுமிடத்து, மேற்குறித்த தீர்வை விதிக்கப்படலாகாது அல்லது அறவிடப்படலாகாது எனவும் ; அத்துடன்

(4) 2012.03.30 ஆந் திகதிய 1751/29 ஆம் இலக்கத்தைக் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 950 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது எனவும்

இக்கட்டளை மூலம் பணிக்கின்றேன்.

மஹிந்த ராஜபக்ஷ,
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

நிதி, திட்டமிடல் அமைச்சு,
கொழும்பு 01,
2012, ஒற்றோபர் 5.

10- 908/4